**செய்தி வெளியீடு எண்:504** **நாள்: 03.08.2017**

# செய்தி வெளியீடு

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பதிலாக ஏற்கனவே நடைமுறையில் இருந்த பழைய ஓய்வூதியத் திட்டத்தையே தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலரான திருமதி.சாந்தா ஷீலா நாயர் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்க 26.02.2016 அன்று ஆணையிடப்பட்டது. இந்த ஆணையின்படி குழு அமைக்கப்பட்டு பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்துகள் கேட்கப்பட்டது. இதுகுறித்து 26.06.2016, 15.09.2016, 16.09.2016, 22.09.2016, 06.10.2016, 02.12.2016 மற்றும் 09.03.2017 ஆகிய நாட்களில் கூட்டங்கள் நடத்தப்பட்டது. இந்நிலையில் மத்திய அரசு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய 21.10.2016 அன்று ஒரு குழுவை அமைத்தது. இந்தக் குழுவின் பரிந்துரைகளையும் பரிசீலித்து வல்லுநர் குழு அறிக்கை தயாரிக்க இருந்த நிலையில் திருமதி.சாந்தா ஷீலா நாயர் அவர்கள் தன் பதவியை ராஜினாமா செய்தார்கள்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு அமைத்த வல்லுநர் குழு தனது பணியினைத் தொடர்ந்து விரைவாக அறிக்கை சமர்பிக்க ஏதுவாக டாக்டர்.T.S.ஸ்ரீதர் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களை வல்லுநர் குழுவின் தலைவராக தமிழக அரசு நியமித்து இன்று (03.08.2017) ஆணையிட்டுள்ளது. இக்குழு, அரசு அலுவலர்களின் ஓய்வூதியம் குறித்த அறிக்கையினை நவம்பர் 2017 மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**